நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்

முன்னிலை – திரு.K.தாயுமானவர், M.B.A., M.L.,

நீதித்துறை நடுவர் எண்.3 நாகர்கோவில். (முழு பொறுப்பு)

2022-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் நாள் வியாழக்கிழமை

<u>முதல் விசாரணை வழக்கு எண்.121/2022</u>

மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்
அஞ்சுகிராமம் காவல் நிலைய
குற்ற எண்.261/2017 ---- குற்றமுறையிடுபவர்

/எதிர்/

விக்னேஷ், (வயது 28)
த/பெ.யோவான்,
அந்தோணியார் தெரு,
ராஜாவூர் ---- எதிரி

இந்த வழக்கானது 19.12.2022 ம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 22.12.2022 ம் நாள் இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 2 திருமதி.ஜானகி அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.G.முத்தரசு ஆஜராகியும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்த இவ்வழக்கிற்காக இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

சாட்சி.1 மிக்கேல்ராஜா என்பவருக்கும் பக்கத்து வீட்டு விக்னேஷ் என்பவருக்கும் தான் பெண்களிடம் பேசுவதாக கூறியதில் தங்களுக்கு முன் விரோதம் உண்டு. இந்த முன்விரோதம் காரணமாக கடந்த 27.08.2017-ம் தேதியன்று மாலை சுமார் 7.00 மணியளவில் வரதராஜன் என்பவருக்கும் எதிரி விக்னேஷ் என்பவருக்கும் ஊர் குளத்தங்கரையில் வைத்து வாய் தகராறு ஏற்பட்டு சண்டை நடந்து கொண்டிருந்த வேளையில் சாட்சி.1 மிக்கேல்ராஜா என்பவர் இருவரையும் விலக்கு பிடித்து தடுத்து நிறுத்தி விட்டு, பின்னர் வீட்டுக்கு சென்றதாகவும், சாட்சி.1 தலையீட்டதால் ஆத்திரமடைந்த எதிரி விக்னேஷ், இரவு சுமார் 7.45 மணியளவில் TN74 AB 9938 எண் கொண்ட பைக்கில் ஒரு வெட்டு வாளுடன் வந்து சாட்சி.1 வீட்டு பக்கத்தில் மேல்பக்கம் நின்று கொண்டிருக்கும் போது லேய் புண்டாமோன தேவடியாமோன என்று கெட்ட வார்த்தையில் பேசி நீ பல பெண்களிடம் சாலியாக இருக்கிறே நான் யாரிடமும் சண்டே போட்டால் விலக்கு பிடிக்குறே எனது போக்கை நீ கண்டிக்கிறாய் நீ உயிரோடு இருந்தால் தானே இப்படி செய்வாய் நீ இதோடு செத்து தொலைந்து போ என்று கூறிக்கொண்டு கையில் வைத்திருந்த வெட்டு வாளை கொண்டு தலையில் ஓங்கி வெட்டியதில் சாட்சி.1ன் வலது பக்க தலையில் பட்டு ரத்தகாயம் ஏற்பட்டு மீண்டும் மாறி மாறி ஓங்கி வெட்டு வாளால் வெட்டியதில் வலது பக்க முழங்கையில் பட்டு பலத்த ரத்தகாயம் ஏற்படுத்தியும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் சத்தம் போட்டு கொண்டு ஓடி வரவே எதிரி கையல் வைத்திருந்த வெட்டுவாளை ஓங்கி காட்டி

கொண்டு இதோடு செத்து போவாய். சாகாவிட்டால் உன்னை வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாகவும், எனவே எதிரிமீது அஞ்சுகிராமம் காவல் நிலைய ஆய்வாளர் இ.த.ச. பிரிவு 294(பி),326,307 IPC கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது கு.வி.மு.ச.பிரிவு 207-ன் படி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் எதிரிக்கு வழங்கப்பட்டது.

3. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக கு.வி.மு.ச.பிரிவு 209(a)-ன் கீழ் நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கின் எதிரி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் இருந்து வருகிறார். எனவே அவர் மீதான வழக்கு நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற விசாரணையில் இருக்கும் போதும் விசாரணை முடிவு பெறும் வரையிலும் அதே பிணையில் இருக்கவும் கு.வி.மு.ச 209(b) பிரிவின் படி உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண். 230/2017 உள்ள இவ்வழக்கின் சொத்துகளை கு.வி.மு.ச.பிரிவு 209(c) படி நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்படுவது குறித்து அரசு குற்றத்துறை வழக்குரைஞருக்கு அறிவிக்கப்பட்டது.

7. எதிரி நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டு என்று கூறினார்.

8. எதிரி 05.01.2023 ஆம் தேதி நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 22-ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-

நீதித்துறை நடுவர் எண்.3,

நாகர்கோவில். (முழு பொறுப்பு)

**குறிப்பு-**

1. எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் - 29.08.2017
2. எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவின்படி பிணையில் சென்ற நாள் - 10.10.2017

**நகல் -**

1. நாகர்கோவில் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. நாகர்கோவில் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. மாவட்ட அரசு குற்றத்துறை வழக்குரைஞர், நாகர்கோவில்.